**லாஹுகல பிரதேச சபை**
**அம்பாறை மாவட்டம்**

-----------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஏப்ரல் 12 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஒக்தோபர் 19 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து லாஹுகல பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கை

நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போது பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கை நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்படவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் வருமான செலவினக் கணக்கின் ரூபா 1,419,263 தொகையான மிகையானது திரண்ட நிதியத்திற்கு சேர்க்கப்படாமையால் ஐந்தொகையில் காண்பிக்கப்பட்டுள்ள உரித்துகள் மேற்படி பெறுமதியால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) வாகனத் தரிப்பிடத்தினை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்ட ரூபா 2,873,007 தொகை நிலையான சொத்துக்களின் கீழ் ரூபா 2,498,267 ஆக கணக்கு வைக்கப்பட்டிருந்தமையால் நிலையான சொத்துக்கள் ரூபா 374,740 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) 2017 ஆம் ஆண்டிற்கு முன்னர் நடைமுறைப்படுத்தப்பட்ட 04 செயற்திட்டங்கள் மற்றும் நடப்பாண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட 03 செயற்திட்டங்களுக்குரியதாக ஒப்பந்தக்காரர்களுக்கு செலுத்த வேண்டிய முறையே ரூபா 423,675 மற்றும் ரூபா 3,890,204 தொகை கடன்பட்டோராக கணக்கு வைக்கப்பட்டிராமையால் நடைமுறை பொறுப்புகள் அந்த பெறுமதிகளால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) வருமானப் பரிசோதகரால் நேரடியாக வங்கியின் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 18,435 தொகையான வருமானம் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) தற்போது பயன்படுத்தப்படும் சபைக்கு சொந்தமான ரூபா 59,719,729 பெறுமதியான 05 வாகனங்கள் மற்றும் பெறுமதி மதிப்பிட முடியாத மேலும் 03 வாகனங்களின் பெறுமதிகளை மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருக்காமையால் நிலையான சொத்துக்களின் பெறுமதியானது உண்மையை பிரதிபலிக்கும் விதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டின் மற்றும் 2013 ஆண்டு முதல் பெற வேண்டிய முத்திரைக் கட்டணங்கள் முறையே ரூபா 497,000 மற்றும் ரூபா 630,500 தொகைளை வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையால் முறையே ஆண்டின் வருமானம் மற்றும் நடைமுறைச் சொத்துக்கள் அந்த அளவினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன், 2016 ஆம் ஆண்டிற்கு உரியதாக கிடைத்த ரூபா 404,718 தொகையான முத்திரைக் கட்டணங்கள் மீளாய்வாண்டின் வருமானமொன்றாக கணக்கு வைக்கப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான செயற்பாட்டு மிகையானது அந்த அளவினால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டின் செப்தம்பர், ஒக்தம்பர் மற்றும் நவம்பர் மாதங்களுக்குரியதாக பெற வேண்டிய நீதிமன்ற தண்டப்பணமாக ரூபா 352,521 தொகை கணக்கு வைக்கப்பட்டிராமையால் வருடத்திற்கான செயற்பாட்டு மிகை மற்றும் நடைமுறை சொத்துக்கள் அந்த பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஏ) இலங்கை சிறு மீன்பிடி சம்மேளனத்தினால் 2015 பெப்ரவரி 15 ஆந் திகதி கையளிக்கப்பட்ட பல்நோக்கு கட்டிடத்தின் பெறுமதி மதிப்பிடப்பட்டு நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஐ) 2016 ஆம் ஆண்டு மற்றும் அதற்கு முன்னைய பொருள் மெய்மையாய்வு அறிக்கைகளுக்கமைய 2017 திசெம்பர் 08 ஆந் திகதி அழிக்கப்பட்ட மற்றும் ஏலமிடப்பட்ட 75 விடயங்களின் பெறுமதிகள் இனங்காணப்பட்டு கணக்குகளிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

கணக்கு இலக்கம் 6162300 கொண்ட கணக்கிற்குரிய வங்கி இணக்கக்கூற்றுக்கமைய காசுப் புத்தகத்தின் மீதியானது ரூபா 3,713,370 ஆன போதிலும், வங்கிக்கூற்றுக்கமைய மீதியானது ரூபா 3,653,273 ஆகும். அதற்கமைய ரூபா 60,097 இனால் குறைவாக காணப்பட்டது.

### 1.3.4 தொங்கல் கணக்கு

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட ஐந்தொகையில் தேறிய சொத்துக்கள் மற்றும் உரித்து ஆகியவற்றுக்கிடையே ரூபா 1,966,628 தொகையான வேறுபாடொன்றை காட்டியதுடன், அந்த தொங்கல் கணக்கின் மீதியை இனங்கண்டு கணக்குகளில் இறுதி சீராக்கங்கள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.5 இணங்காமைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | பிரதேச சபை விதி 180 | | பிரதேச சபையின் வருமானங்களைச் சேகரித்தல், களஞ்சியக் கட்டுப்பாடு மற்றும் காசோலை விநியோகித்தல் என்பவற்றுக்குரிய உத்தியோகத்தர் களினால் பிணைப்பணம் வைப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | | |
| (i) | நிதிப்பிரமாணம் 396(ஈ) | 8,620 | கொடுப்பனவுகளுக்காக 06 மாதங்களை விஞ்சிய ரூபா 8,620 பெறுமதியான 06 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நிதிப்பிரமாணம் 371 | 86,066 | 1988 முதல் 2012 ஆம் ஆண்டு வரையான காலத்தில் 10 சந்தர்ப்பங்களுக்குரியதாக விநியோகிக் கப்பட்ட ரூபா 86,066 தொகையான முற்பணங்களை 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நிதிப்பிரமாணம் 571 | 546,494 | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 546,494 பெறுமதியான 02 வருடங்களை விஞ்சிய 06 வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | நிதிப்பிரமாணம் 1647(உ) | -- | சபையின் 21 வாகனங்கள் தொடர்பாக வாகனப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (v) | நிதிப்பிரமாணம் 1646 | -- | 12 வாகனங்கள் தொடர்பாக மாதாந்தம் பிரயாணம் தொடர்பான பொழிப்பும் நாளாந்த ஓட்ட அட்டவணையும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/2 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | -- | சபையினால் கணனி மற்றும் கணனி உபபாகங்கள் தொடர்பாக தனிப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை | | |
| | (i) 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய அரச நிர்வாகச் சுற்றறிக்கை 30/2016 | | சபைக்குச் சொந்தமான வாகனத்திற்கும் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டிய 12 வாகனங்கள் தொடர்பில் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய அரச நிர்வாகச் சுற்றறிக்கை 09/2009 | -- | வருகை மற்றும் வெளிச்செல்லல்களை பதிவு செய்வதற்காக விரலடையாள இயந்திரம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான பிரதேச சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 346,946 ஆகவும், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 647,966 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | - | - | - | - | - | - | - | - |
| வாடகை | 1,100,000 | 946,558 | 946,558 | 200 | 750,000 | 912,292 | 912,292 | 200 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 205,000 | 219,960 | 219,960 | 26,783 | 200,500 | 138,500 | 138,500 | 26,783 |
| ஏனைய வருமானம் | 2,535,000 | 180,2166 | 1,802,166 | - | 3,425,000 | 1,164,638 | 1,164,638 | - |

### 2.2.2 வருமானம் சேகரித்தலின் செயலாற்றல்

சபையினால் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் அறவிடப்பட வேண்டியதாக இருந்த மொத்த வருமானம் ரூபா 2,995,667 ஆக இருந்ததுடன், ஆண்டினுள் ரூபா 2,968,684 தொகை அறவிடப்பட்டிருந்தது. அதற்கமைய வருமானம் சேகரித்தலின் சதவீதமானது 99% ஆக உள்ளதாக அவதானிக்கப்பட்டது.

### 2.2.3 அனுமதிப்பத்திரக் கட்டணம்

பேரேட்டுக்கமைய 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக செலுத்தப்படாத அனுமதிப்பத்திர கட்டணங்கள் 26,783 ஆக இருந்ததுடன், அந்த தொகையை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 ஏனைய வருமானம்

2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய 1597/8 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலுக்கமைய தொலைபேசிக் கோபுரத்திற்காக அங்கீகாரம் வழங்குவதற்கு ஆகக் குறைந்தது ரூபா 20,000 படி அறவிடப்பட வேண்டிய போதிலும், சபையின் அதிகாரம் பிரதேசத்தினுள் காணப்படுகின்ற 08 கோபுரங்களுக்காக ரூபா 160,000 தொகையான பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும், 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அறவிடப்பட வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 352,251 மற்றும் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 630,500 ஆகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ரூபா 9,254,688 செலவிடப்பட்டு பானம மக்கள் பூங்காவில் நிர்மாணிக்கப்பட்ட 08 அறைகளைக் கொண்ட கட்டிடத்தின் பணிகள் 2017 திசெம்பர் 26 ஆந் திகதி நிறைவு செய்யப்பட்டிருந்த போதிலும், 2018 யூலை 20 ஆந் திகதி வரையிலும் திறந்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 8,056,903 தொகை செலவிடப்பட்டு 2017 திசெம்பர் 26 ஆந் திகதி நிர்மாணங்கள் நிறைவு செய்யப்பட்ட பானம மக்கள் பூங்காவின் வளிச்சீராக்கப்பட்ட 04 அறைகளைக் கொண்ட கட்டிடம் 2018 யூலை 20 ஆந் திகதி வரையிலும் திறந்து வைக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக இங்கு பொருத்தப்பட்டுள்ள வளிச்சீராக்கிகளின் உத்தரவாதக் காலமும் பயன்படுத்தப்படாது நிறைவறைந்தவாறு உள்ளதாக அவதானிக்கப்பட்டது.

(இ) பனாம பல்நோக்கு கட்டிடத்தின் பணிகள் ரூபா 6,049,901 தொகையான செலவினமொன்று மேற்கொள்ளப்பட்டு 2017 திசெம்பர் 26 ஆந் திகதி நிறைவு

செய்யப்பட்டிருந்த போதிலும், 2018 யூலை 20 ஆந் திகதி வரையிலும் திறந்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ரூபா 85,812,081 பெறுமதியான கட்டிடங்கள் காணப்பட்ட போதிலும், சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் சபைக்கு சட்டரீதியான உரித்துடைய எந்தவொரு காணியும் இல்லாதிருந்தமையால் மேற்படி கட்டிடங்களின் சட்ட ரீதியான உரித்து தொடர்பில் சிக்கலான நிலைமையொன்று காணப்பட்டது.

(உ) பொருள் மெய்மையாய்வு அறிக்கைக்கமைய காணாமற் போன 1,537 புத்தகங்கள் மற்றும் 2014 திசெம்பர் மாதத்தின் போது வெள்ளத்தில் அழிவடைந்த வாசிகசாலை புத்தகங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) லாஹுகல பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான பதவியணியில் செயலாளர் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் உள்ளடங்கலான 06 பதவிகளின் 09 உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள் நிலவியது.

(ஆ) சபையில் சேவையாற்றிய இரு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 8,000 தொகையான ஊழியர் கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ஊழியர் கடன்களுக்காக அறவிடப்பட வேண்டிய வருடாந்த வட்டி விகிதம் 4.2% ஆன போதிலும், கடன் தவணைகளை கணிப்பிடும் போது நேர்ந்த தவறுகளின் காரணமாக 20 ஊழியர்களின் ரூபா 200,518 தொகையை மேலதிகமாக அறவிடுவதற்காக பதிவேடுகள் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது மாத்திரம் ரூபா 54,379 தொகை அவ்வாறு மேலதிகமாக அறவிடப்பட்டிருந்தது.

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

லாஹுகலயில் அமைந்துள்ள வியாபாரக் கட்டிடத்தின் 02 கடைகள் 2017 யூலை 26 ஆந் திகதி வாடகை அடிப்படையில் வழங்குவதற்கு அல்லது வேறு பணிகளுக்காக பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்பட்டது.

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.4.1 பராமரித்தல் மற்றும் பழுதுபார்த்தல்

சபைக்கு சொந்தமான 21 வாகனங்களில் 11 வாகனங்கள் பழுதுபார்க்க வேண்டிய நிலையில் காணப்பட்ட போதிலும், அந்த வாகனங்கள் பழுது பார்க்கப்பட்டு பயன்படுத்தப்படாது சபையின் வளாகத்தில் தரித்து வைக்கப்பட்டிருந்தது.

#### 3.4.2 கையேற்கப்படாத சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபைக்கு சொந்தமாக காணப்படும் 21 வாகனங்களின் 08 வாகனங்களின் உரித்து சபையின் பெயரில் சுவீகரிக்கப்பட்டிருந்ததுடன், எஞ்சிய 13 வாகனங்களை சபைக்கு சுவீகரிப்பதற்கு தேவையான பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்கு சொந்தமாக காணப்படும் 21 வாகனங்களில் 15 வாகனங்களுக்காக காப்புறுதி சான்றிதழொன்றை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5 பெறுகைகள் திட்டம்**

2006 மார்ச் 24 ஆந் திகதி வெளியிடப்பட்ட பாதீட்டுச் சுற்றறிக்கையின் 128 ஆம் இலக்கத்திற்கமைய சபையினால் 2017 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டின் பாதிடப்பட்ட செலவினத்திற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையே 07 சதவீதம் முதல் 80 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் ஏற்பட்டமையினால் பாதீடு சிறந்த முகாமைத்துவக் கட்டுப்பாட்டு கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமையும் கட்டுப்பாடும்**

கீழே காண்பிக்கப்படுகின்ற முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் சபை விசேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

| | **முறைமைகள்** | | **கவனம் செலுத்த வேண்டிய துறைகள்** |
|---|---|---|---|
| (அ) | கணக்கீடு | - | (i) கணக்கு புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் நாளதுவரையாக பேணப்பட்டிராமை. |
| | | | (ii) பொதுப் பேரேடு சமப்படுத்தப்படாமை. |
| (ஆ) | சொத்துக்கள் மற்றும் ஆதனங்கள் | - | (i) பதிவேட்டிற்குட்படுத்தாமை. |
| | | | (ii) பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை |
| | | | (iii) ஆக்கபூர்வமாக பயன்படுத்தாமை. |
| (இ) | இருப்பு | - | (i) பதிவேட்டிற்குட்படுத்தாமை. |
| | | | (ii) முறையற்ற இருப்புக் கட்டுப்பாடு. |
| (ஈ) | கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் | - | (i) பட்டோலைகள் தயாரிக்கப்படாமை. |
| | | | (ii) காலப்பகுப்பாய்வு தயாரிக்கப்படாமை. |
| (உ) | ஊழியர் முகாமைத்துவம் | - | வெற்றிடங்கள் நிரப்பப்பட்டிராமை |
| (ஊ) | செயற்திட்டம் மற்றும் ஒப்பந்தம் | | (i) மதிப்பீடுகளை தயாரிக்காமை. |
| | | | (ii) போதியளவான மேற்பார்வையொன்று இல்லாதிருந்தமை. |
| (எ) | வருமான முகாமைத்துவம் | - | வருமானங்களை மதிப்பிடல் மற்றும் அறவிடப்படாமை. |